## <u>சாதாரணக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2020-ம் ஆண்டு விளம்பி வருடம் ஜுன் மாதம் **30.06.2020–ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண் : 139 / 2020</u>**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018 அறிவிப்பு தினசரி நாளிதழ்லான மாலைமலர் செய்தித்தாளில் 12.03.2020 கோவை பதிப்பகத்தில் வெளியிடப்பட்டமைக்கு பட்டியல் தொகை வழங்க கோரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களின் வெளியீட்டு ஆணை எண். 100 / 2020 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2019 நாள். 11.03.2020 அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விளம்பரம் வெளியிடப்பட்டமைக்கான தொகை ரூ. 13,356/- வழங்க கோரி மாலைமலர் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.      / 2020 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 140 / 2020</u>**

மாவட்ட தேர்தல் அலுவலர் திருப்பூர் அவர்களின் கடித நாள். 13.06.2020ன் படி திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட வெள்ளகோவில் நகராட்சியின் வாக்கு சாவடிகளின் எண்ணிக்கைக்கு தக்கவாறு கர்நாடக மாநிலத்திலிருந்து திருப்பூர் மாவட்டத்திற்கு மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதற்கான செலவினத்தொகை ரூ. 24090 /–யை ”ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காரிமங்கலம்” அவர்களுக்கு வங்கி வரைவோலையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 122 /2019/எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 141 / 2020</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வீடு வீடாக சென்று டெங்கு தடுப்பு பணி மேற்கொண்டு வரும் DBC பணியாளர்களின் மன்ற அனுமதிக்காலம் 31.03.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 1588 / ஜே1 / 2015 நாள். 16.10.2015 மற்றும் துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 509 / அ2 / 2010, நாள். 07.10.2015ல் நகராட்சி பகுதிகளில் வீடு வீடாக சென்று டெங்கு காய்ச்சல் பரவமால் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளரை நியமனம் செய்யவும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் கண்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தால் அல்லது டெங்கு காய்ச்சல் என தெரிந்தால் உடனே அப்பகுதியில் அதிகமான DBC பணியாளர்களை நியமித்து 300 வீடுகளுக்கு 2 களப்பணியாளர்கள் நியமனம் செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 16828 வீடுகள் உள்ளதால் 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் என்ற அடிப்படையில் 16828 வீடுகளுக்கு 56 தற்காலிக DBC களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தலாம்.

எனவே இப்பணிக்கு 01.07.2020 முதல் 30.09.2020ம் தேதி முடிய இப்பணியினை மேற்கொள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர், அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 20.08.2019ல் தெரிவித்துள்ள புதிய தினக்கூலி அடிப்படையில் வரிசை எண். **3**–ல் மஸ்தூர் II ரூ. 350 /- அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் மஸ்தூர் II பணியாளர்களுக்கு நகராட்சி ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் ரூ. 300 /– என கூலி நிர்ணயம் செய்து 3 மாத காலத்திற்கு தற்காலிக DBC பணியாளர்களை நியமனம் செய்து பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 16,00,000 /- ஆகும். எனவே தற்காலிக DBC களப்பணியாளர்களின் பணிகாலத்தை 01.07.2020 முதல் 30.09.2020 வரை கால நீடிப்பு செய்யவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 16,00,000 /–ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 862 / 2015 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 142 / 2020</u>**

வெள்ளகோவில் நகராட்சி பகுதிகளுக்கு சொந்தமான சொரியங்கிணத்துப்பாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உரக்கிடங்கு பகுதியில் தினசரி வரும் குப்பைகளை உரமாக்கும் பணிகள் மற்றும் பிளாஸ்டிக், பாட்டில்கள், எலக்ட்ரானிக் பொருட்களை தனித்தனியாக பிரித்து சேகரிக்கும் பணிகள் நடைபெறுகிறது. அந்த நேரத்தில் பிளாஸ்டிக் பேப்பர்கள் மற்றும் சில கழிவுகள் காற்றில் பறந்து சுற்றுச்சுவரை தாண்டி வெளியேறிவருகிறது. இதனால் அருகில் உள்ள பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வருகின்றன. எனவே மேற்படி தடுப்புச் சுவரை உயர்த்தி அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ. 10,00,000 /– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்

(கோப்பு எண். 611 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 143 / 2020</u>**

வெள்ளகோவில் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் செய்ய பயன்படும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 8” வினியோக மெயின்குழாய் ஈரோடு ரோடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் நெடுஞ்சாலைத்துறையின் மூலமாக ஈரோடு ரோடு பகுதியில் தார்சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறுவதால், சாலையில் ஓரமாக மேற்படி விநியோக மெயின் குழாயை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

கல்லாங்காட்டுவலசு மேற்குப் பகுதியல் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு வினியோக குழாய் அமைக்கப்படவில்லை. எனவே இப்பகுதிகளுக்கு குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது.

அகலரைப்பாளையம்புதூர் வடக்கு பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் சிறுமின்விசை பம்பு திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டி **2000** லிட்டர் கொள்ளளவு கொண்டதாக உள்ளது. இதனால் அனைத்து பகுதிகளுக்கும் சீரான தண்ணீர் விநியோகம் கிடைப்பதில்லை. எனவே, இக்குறைபாட்டை சரிசெய்ய **2000** லிட்டர் தண்ணீர் தொட்டிக்கு பதிலாக **5000** லிட்டர் தண்ணீர் தொட்டி அமைக்கலாம். கரட்டுப்பாளையம் மற்றும் கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பொருட்டு கணபதிபாளையம் ரோடு முதல் கரட்டுப்பாளையம் வரை குழாய் விஸ்தரிப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது.

மேற்படி பணிகள் குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும், மேற்படி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 8,00,000 /– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்

(கோப்பு எண். 649 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 144 / 2020</u>**

நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிக்கப் பயன்படும் 17 எண்ணிக்கையிலான BOV வாகனங்கள் பழுதடைந்து இயங்காமல் உள்ளதாக துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள BOV வாகனங்களில் 9 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு பேட்டரிகள் பழுதடைந்துள்ளது. எனவே நகராட்சி பொதுசுகாதார அவசர அவசியத்தைக் கருதி இதனை அப்புறப்படுத்திவிட்டு புதிய பேட்டரிகள் (Lithium batterys) பொருத்த வேண்டியுள்ளது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 587 / 2020 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 145 / 2020</u>**

நகராட்சிக்குச் சொந்தமான வீரக்குமார் நகர் கட்டணக் கழிப்பிடம் குத்தகை விடப்பட்டுள்ளது. இக்கட்டணக் கழிப்பிடத்தின் 4 கதவுகள் பழுதடைந்துள்ளது. இதனை மாற்றித்தருமாறு குத்தகைதாரரால் கோரப்பட்டுள்ளது. எனவே இந்தக் கழிப்பிடத்தில் பழுதடைந்துள்ள கதவுகளைஅகற்றிவிட்டு புதிய கதவுகள் பொருத்த வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இந்தப்பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. **30,000 /—**க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 649 / 2020 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 146 / 2020</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை சாலை NH67 திருப்பூர் கோட்டம் **255/650** முதல் **259/250** வரை சாலை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி நடைபெறவுள்ளதாக காங்கயம் உதவிப்பொறியாளர் கடிதம் எண். EPC 2020-21 / வெள்ளகோவில் டவுன் / உ.பொ. / நாள். **22.06.2020—**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தேசிய நெடுஞ்சாலையில் விரிவாக்கப் பணிகள் நடைபெற உள்ளதால், இந்த சாலையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்ட மெயின் குழாய்கள், விநியோகக் குழாய்கள், சிறுமின்விசைப் பம்பு திட்டங்களின் குழாய்கள், HDPE hose பைப்கள், கேட்வால்வுகள் சேதமடையும் வாய்ப்புள்ளது. இதனால் காவிரி குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலையுள்ளது. இதனால் சேதமடையும் குழாய்களை உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்ய வேண்டியுள்ளது. பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் உடனுக்குடன் மேற்கொள்ளலாம். இதற்கான தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. **10,00,000 /—**க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 610 / 2020 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 147 / 2020</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **22.05.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட | 1000000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.71 %<br>மதிப்பீட்டைவிட அதிகமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 7.40 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீராகன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், டி.ஆர். நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 454 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 148 / 2020**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **22.05.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் ரோடு பகுதியில் மின்மோட்டார் அறை மற்றும் குழாய் விஸ்தரிப்பு மேற்கொள்ளுதல் | 340000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.73 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.73 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீராகன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், டி.ஆர். நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 454 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 149 / 2020**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **22.05.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் ரோடு பகுதியில் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 1000000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.74 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.84 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீராகன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், டி.ஆர். நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 454 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் / தனி அலுவலர்**
**வெள்ளகோவில் நகராட்சி**